வினாக்கள்—விடைகள்

ஆற்காடு வட்டத்தில் புதிய நியாய விலைக் கடைகள்.

798—(*வினா எண் 9340) திரு. த. பழனி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டம், வி. கே. மாங்காடு, புதேரி-அனத்தாங்கல், கனியனூர்—புதூர், புதுச்சொறையூர், சாத்தூர்—களர் ஆகிய கிராமங்களுக்கு நியாய விலைக் கடைகள் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: வி. கே. மாங்காடு, மல்லிகாபுரம் ஆகிய இரு மதுராக்களுக்கு வி. கே. மாங்காட்டில் ஒரு பகுதி நேரக் கடை திறக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புதேரி, அனைத்தாங்கல் ஆகிய இரு மதுராக்களில் புதிய கடை திறப்பதற்கு உத்தேசமில்லை.

கனியனூர் புதூரில் உள்ள குடும்ப அட்டைகளை பிண்டித்தாங்கல் நியாயவிலைக் கடையுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புதூர், சொரையூரில் தனிக்கடை திறக்க உத்தேசமில்லை.

களர் மற்றும் லப்பைபேட்டை மதுராக்களுக்கு களர் என்ற இடத்தில் ஒரு பகுதி நேரக்கடை அமைக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. த. பழனி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த புதேரி, அனதாங்கல் இரண்டு ஹாம்லெட்களில் ஒன்று புதேரி இசையனூர் பஞ்சாயத்திலிருந்து ஏறக்குறைய 5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. மற்றொன்று அனத்தாங்கல் கிராமமானது அரும்பாக்கம் பஞ்சாயத்திலிருந்து ஏறத்தாழ 10 கி.மீ. தூரம் சுற்றி வருகிற நிலைமை இருக்கிறது. அனத்தாங்கல், புதேரி ஆகியவை தனித்தனி பஞ்சாயத்துக்களாக இருப்பதால், அவை இரண்டும் பெரிய கிராமமாக இருப்பதால், அந்த இரண்டு கிராமங்களையும் ஒன்று சேர்த்து அவைகளுக்கு புதிய பகுதிநேர கடை உருவாக்கி தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதேரி, அனத்தாங்கல் ஆகிய பகுதிகளில் புதிய கடைகளை ஆரம்பிக்கலாமா என்று சொல்லி, அதிகாரிகள் ஆய்ந்து பார்த்து முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லி இருக்கின்ற பிரச்னைகளை தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் அதை ஆய்ந்து பார்த்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசிடமிருந்து அறிக்கைகள் வரப்பெற்றுள்ள கவன ஈர்ப்புகள், அறிவிப்புகளுடன் அவையில் வைக்கப்பட்டு உள்ளன. சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள், அவற்றை உரிய மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தால், அத் தீர்மானத்தில் குறிக்கப்பட்டுள்ள முதல் உறுப்பினர் மட்டும் அதனை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். நேரம் கருதி இன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மீது விளக்கத்திற்காக ஒரு வினா மட்டும் அனுமதிக்கப்படும்.

அரசுத் துறையிடமிருந்து இதுவரை அறிக்கைகள் வராத கவன ஈர்ப்புகள், துறைகளிடமிருந்து அறிக்கைகள் வந்தவுடன், உரிய உறுப்பினர்களின் தகவலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

இன்று கூட்டத்தின் கடைசி நாளானதால், அறிக்கைகள் வரப்பெறாத கவன ஈர்ப்புகளை மட்டும் அவை நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்ய, சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

(1) சிவகங்கை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன் வெடி குண்டுகள் வெடித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ‘சிவகங்கை கலெக்டர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்தில் 14—4—1986 அன்று குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது குறித்து திரு. கு. சுப்பராயன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (திரு. கு. சுப்பராயன் இருக்கையில் இல்லை).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்: